முருகப்பெருமான் துணை

**மகான் அழுகண்ணிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.09.2022**, புதன்கிழமை

1. சண்முகனார் வழிபாடுதனை செய்து
   சகலரும் நன்மை அடையவே
   மண்ணுலகில் சன்மார்க்கம் நிறுவி
   மாதருமம் வளர்க்கும் அரங்கனே
2. அரங்கனே உன் அருளை பெற
   அனைவருக்கும் மேன்மை கிட்டுமென
   வரங்களாக அனுகூல ஆசிதனை
   வழங்குவேன் சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே லாப திகதி கணக்கன் வாரம்
   **(**சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் **11**ம் நாள், **28.09.2022** புதன்கிழமை**)**
   தெரிவிப்பேன் அழுகண்ணிச்சித்தர் யானும்
   இங்கனமே ஞான உலகம் அமைய
   இயம்பிடுவேன் அரங்கன் வழி மக்கள் வர
4. வரவேண்டி கலியுகத்தில் ஞானியர்கள்
   வரம்தந்து அரங்கனுடன் இணைந்திருக்க
   தரணியோர் ஓங்காரக்குடிலை நோக்கி
   தக்கபடி வருகை தந்தால் போதுமப்பா
5. அப்பனே மக்களிடை தெளிவும்
   அழியாமை பெற உண்டான வரமும்
   காப்பாக அரங்கன்வழி அரங்கேறி
   கலியுகத்தில் அனைவருமே அனுகூலம் பெறுவர்
6. பெறுவரே ஞானிகளாகும் மகா சக்தியை
   பிரணவ சித்தியாக அடைதல் கண்டு
   மாறுதலை அரங்கனால் அடைவர்
   மகத்துவம் பல பெற்று ஞானிகளாக ஆவர்
7. அவனியில் அரங்கனே சிறந்த குரு
   அடையாளம் கண்டு இணைந்தவர்க்கு
   அவனியில் அனுகிடும் வீடு பேறு
   அன்னதனால் கலியுக மக்கள் எல்லாம்
8. மக்களெல்லாம் அரங்கனை நாடிவர
   மரணத்தை விரட்டி வாழ நேரும்
   ஊக்கமுடன் சன்மார்க்க நெறியில் வாழ
   உண்மைநிலை கூடி தெளிவு காண நேரும்
9. நேர்மை கொண்ட மக்களாய் அரங்கன்வழி
   நிலவுலகோர் வருகை மிகுதியாக
   பெருமைமிக்க ஞானயுக மாற்றமாக
   பேருலகம் இலகுவாய் அடைதல் கண்டு

10. கண்டுமே ஞானயுக மாற்றம்
கந்தனே நடத்தும் வண்ணமாக
தொண்டுவழி அரங்கனால் நடக்கும்
தெய்வீகமாக இந்தவித அற்புதம் நிகழும்

11. நிகழவே அரங்கனே கலியினில் அவதரித்த
நீதி அரசன் தர்ம தேவனாகும்
ஜெகமெங்கும் அரங்கன் புகழ் ஓங்கவே
சித்திமிகு ஞான ஆட்சி சடுதி மலரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–